**தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 273 – புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

மாவட்ட செயலகத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 684.95 மில்லியனாக இருந்ததுடன், அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 678.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 5.96 மில்லியன் அதாவது 0.87 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 627.65 | 621.73 | 5.92 | 0.94 |
| மூலதன | 57.30 | 57.26 | 0.04 | 0.07 |
| **மொத்தம்** | **684.95** | **678.99** | **5.96** | **0.87** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 33 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 18 திணைக்களங்களினால் ரூபா 2,153.80 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 1,279.77 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 874.03 மில்லியன் அதாவது 40.58 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 51.87 | 45.01 | 36.87 | 41.03 | 160.00 | 140.48 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

புத்தளம் மாவட்ட செயலகத்தின் கீழுள்ள கட்டுநிதிக் கணக்கு இலக்கம் 7002/0000/00/0312/0015/000 இன் கீழ் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 76.50 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

புத்தளம் மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 07 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 270.49 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0070/000 | 0.36 |
| 6000/0000/00/0002/0095/000 | 0.27 |
| 6000/0000/00/0013/0063/000 | 50.89 |
| 6000/0000/00/0016/0046/000 | 202.48 |
| 6000/0000/00/0017/0016/000 | 11.54 |
| 6000/0000/00/0019/0009/000 | 4.02 |
| 6000/0000/00/0020/0003/000 | 0.93 |
| **மொத்தம்** | **270.49** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

புத்தளம் மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பிணைப் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் ஏனைய பதிவேடுகளும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (அ) | வாகனங்கள் தொடர்பான நிலையான சொத்துப்பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கடன் பதிவேடு | நிதிப்பிரமாணம் 485 |
| (இ) | இருப்புப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 |
| (ஈ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

அறிக்கையிடப்பட்டதன் பிரகாரம் புத்தளம் மாவட்ட செயலகத்தில் நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் ரூபா 1,002,066 பெறுமதியான 6 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உள்ளகக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.3.1 பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 150,000 கூட்டுத்தொகையான மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 02 செலவின விடயங்களுக்காக மிகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 6 சதவீதம் முதல் 11 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.3.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

மீளாய்வாண்டின் போது வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு, சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் முறையே ரூபா 571,000,000 தொகை, ரூபா 96,028,066 மற்றும் ரூபா 179,403,173 தொகையான நிதியேற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் முறையே ரூபா 533,666,904 தொகை, ரூபா 89,659,386 தொகை மற்றும் ரூபா 104,820,594 தொகைகள் அதாவது நிதியேற்பாடுகளில் முறையே 93 சதவீதம், 93 சதவீதம் மற்றும் 58 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கிடைத்த நிதியேற்பாடு குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

நிதிப்பிரமாணம் 571(1) இன் பிரகாரம் பொது வைப்பு தொடர்பான விரிவான பட்டியல் அரையாண்டு ரீதியாக தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

27301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,415,930 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் கடன் செலுத்தும் போது, 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் ரூபா 616,405 தொகையான இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்தினால் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பள்ளம மற்றும் மஹகும்புக்கடவள பிரதேச செயலகங்களில் காணப்பட்ட இனங்காணப்படாத ரூபா 162,524 தொகையான மீதி உரிய பிரகாரம் இனங்காணப்படாமல் இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஈ) வெளிநாடு சென்ற, ஓய்வுபெற்ற, மரணித்த, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்காக 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய PFD/RED/2015/08 பொது(1) ஆம் இலக்க அரசாங்க நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 மே 13 ஆந் திகதி ஓய்வுபெற்றுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 19,533 தொகை அறவிடவேண்டியிருந்ததாக முந்தலம பிரதேச செயலகத்தின் கீழுள்ள இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றுச் செல்லும் போது சகல கடன் பணமும் அறவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 உள்ளகக் கணக்காய்வு

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகத்தில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 03 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தில் காணப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்ட பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுள்ள காலம் |
|---|---|---|---|
| காணி | 04 | 28,377,000 | ஒரு வருடத்திற்கு மேல் |
| கட்டிடம் | 04 | 2,973,000 | - மேற்படி - |
| மோட்டார் வாகனம் | 06 | காண்பிக்கப்படவில்லை | - மேற்படி - |
| இயந்திரம் பொறிகள் (கைவிரல் அடையாள இயந்திரம்) | 01 | காண்பிக்கப்படவில்லை | - மேற்படி - |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2015 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளிலிருந்து சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிககப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட நிறுவனம் | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| காணி | 01 | மதுவரி கட்டிடம் | 10,000,000 | காண்பிக்கப்பட்டிருக்க வில்லை |
| | 01 | இலங்கை தேசிய மாணவர்களின் 35 ஆவது படையணி | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - |
| | 01 | புனரமைப்பு அலுவலகம் | 4,000,000 | - மேற்படி - |
| கட்டிடங்கள் | 01 | மதுவரி கட்டிடம் | 1,300,000 | - இல்லை |
| | 01 | இலங்கை தேசிய மாணவர்களின் 35 ஆவது படையணி | மதிப்பிடப்பட்டிருக்க வில்லை | - மேற்படி - |
| | 01 | புனரமைப்பு அலுவலகம் | 1,000,000 | - மேற்படி - |

## 3.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| VII ஆவது அத்தியாயத்தின் 12:2:3 ஆம் பிரிவு | கற்பிட்டி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை தொடர்பாக முழுநேர உத்தியோக்கததர்கள் நியமிக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப்பிரமாணம் 104(2) | வாகன விபத்துத் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 128(2))(இ) | ஒவ்வொரு அரையாண்டிற்காகவும் நிலுவை வருமான அறிக்கை தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 257 | உறுதிப்படுத்தப்படாத உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| **(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | புத்தளம் மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் உள்ள சகல வாகனங்களினதும் எரிபொருள் எரிவு இந்த சுற்றறிக்கையின்படி 06 மாதங்களுக்கு ஒரு தடவை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | நாடு முழுவதும் சேவைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு ஒரே இடத்தில் சேவையாற்றிருப்பார்களாயின் வேறொரு இடத்திற்கு பணியிடமாற்றம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், சில பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்காக அச்சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டமை, செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டமை மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்**

மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகத்தினாலும் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மாவட்ட செயலகம்/ பிரதேச செயலகங்கள் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்காமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | | ரூபா | |
| மாளிகாவத்தை சனசமூக மண்டப மீளமைப்பு | மஹவெவ பி.செ | 324,694 | மழையுடன் கூடிய காலநிலை |
| மஹவை குளத்தின் நீர் பஸ்னா வயலின் பக்கச்சுவர் அமைத்தல் | - மேற்படி - | 863,220 | மழையினால் குளத்தின் வான் ஊடாக நீர் வெளியேறியமை |
| பன்கொட ஏ, பீ மக்கள் குடியிருப்புக்களில் மதகு நிர்மாணம் | - மேற்படி - | 366,519 | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமை |
| பஹல வலஹபிட்டிய ஹொறகெலே வயல் வீதிக்கு குடிநீர் வசதி வழங்குதல் | - மேற்படி - | 100,000 | தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து மதிப்பீடு கிடைக்காமை. |
| நெ/ இறணவில தியவர கிராமத்தின் விளையாட்டு மைதானத்தை கிரவல் இட்டு அமைத்தல். | - மேற்படி - | 541,916 | கிரவல் வழங்கும் போது ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல் உரிய காலத்தில் முடியாதிருந்தமை. |
| கந்தகுளிய குடா நெவில் அவர்களின் வீட்டுக்கு அருகிலிருந்து முன்னாலுள்ள வீதியை மீளமைத்தல் | கற்பிட்டி பி.செ. | 447,198 | சீரற்ற காலநிலை மற்றும் சமூகப் பங்களிப்பைப் பெறுவதிலுள்ள வசதியீனம். |
| பள்ளியவத்த பத்தலங்குண்டுவ ஆலயம் அருகில் சனசமூக மண்டபத்தை பழுதுபாத்தல் | - மேற்படி - | 2,259,612 | சீரற்ற காலநிலை மற்றும் போக்குவரத்து வசதியீனத்தால் எந்தவொரு சங்கமும் முன்வராமை. |

| | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு பகுதியில் துங்துட்டுவ அணைக்கு திருப்பி மூடக்கூடிய 4 வாயிற்கதவுகளைப் பொருத்துதல் | மாதம்பை | 688,668 | வடமேல் மாகாண வீதித் திணைக்களத்தால் நிர்மாணத் திட்டம், தாமதிக்கப்பட்டு சமர்பிக்கப்பட்டமையினால் அதன் பின்னர் அடிக்கடி காணப்பட்ட அதிக மழையின் காரணமாக உரிய அணைக்கட்டு அமைந்துள்ள பிரதேசம் நீரினால் மூழ்கியிருந்தது. |
| குடியிருப்பு விவசாய சங்கத்திற்கு சொந்தமான வயல்வெளியின் மத்தியில் உள்ள மத்திய வாய்க்காலை அபிவிருத்தி செய்தல் | | 414,358 | |

**(ஆ) செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்**

ஆணமடுவ பிரதேச செயலகத்தினால் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 600,272 தொகையான கலட்டபெந்தியாவ வெவ/திம்பிரி பொக்குன/ பெம்மே குளம் போன்ற குளங்களின் வான் கதவுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 278,893 தொகை செலவிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும், குளக்கட்டை அமைத்ததன் பின்னர் காட்டு யானைகள் அணைக்கட்டின் ஊடாக சென்றதன் காரணமாக அணைக்கட்டிற்கு சேதம் ஏற்பட்டிருந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினுள் ஒப்பந்தக்காரருக்கு அதனை மீளமைத்தலில் உள்ள வசதியீனத்தால் செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டிருந்தது.

(இ) **செயற்றிட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகத்தினாலும் பின்வரும் செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்றிட்டம் | பிரதேச செயலகம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி | 2015.12.31 இல் உள்ளவாறு செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | ரூபா | |
| எச் 7 கிராமிய சனசமூக மண்டபமொன்றை நிர்மாணித்தல் | ஆனமடுவ | 1,381,665 | காண்பிக்கப்படவில்லை | காண்பிக்கப்படவில்லை | காண்பிக்கப்படவில்லை | 365,608 | நிலவிய சீரற்ற காலநிலையின் அடிப்படையில் ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு மூலப்பொருட்களை வழங்கும் போது ஏற்பட்டுள்ள தாமதம் |
| திவுல்வெவ நீர்த் தாங்கி நிர்மாணம் | - மேற்படி - | 1,231,212 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - | 620,344 | |
| ஹொறகொல்ல ஆலய வளவில் அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிர்மாணம் | மஹவெவ | 1,078,438 | - மேற்படி - | - மேற்படி - | - மேற்படி - | 120,932 | மழையினால் சதுப்பு நிலமான இந்தக் காணி நீரினால் மூழ்கியமை |

**(ஈ) நிதி விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

நிர்மாணங்கள் தொடர்பாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு முழுத் தொகையும் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், வேலை தொடர்பாக எவ்வித செயல்முன்னேற்றமும் காணப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | பிரதேச செயலகம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | விடுவிக்கப்பட்ட தொகை | 2015.12.31 இல் உள்ளவாறு தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | |
| மோய வரை நீர் வழங்கலை நீடித்தல் | சிலாபம் | 259,430 | 259,430 | நீர் இணைப்பு வழங்கப்படவில்லை. |
| முன்னேஸ்வரம் வாளுக் குளம் குடிநீர் செயற்திட்டம் | - மேற்படி - | 661,018 | 661,018 | குழாய்கள் இழைக்கப்பட்டிருக்கவில்லை. நீர் வழங்கல் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

புத்தளம் மாவட்ட செயலகத்தால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் 04 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 15,994 பெறுமதியான வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான 05 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சர்ச்சைக்குரிய தனிமையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கறுவலகஸ்வெவ பிரதேச செயலகத்தின் இஹல புளியன்குளம் நீர் உத்தேசத் திட்டத்திற்காக நீல பெம்மே முதல் நீரை வழங்குவதற்கு நீர்ப் பம்பியொன்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பம்பிக் கூடத்தை நிர்மாணித்தலின் கீழ் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட கிணற்றின் அருகில் வயல் வெளியொன்று காணப்பட்டது. பயிரிடுகின்ற காலத்தின் போது அதனைச் சுற்றி நீர் நிரம்பி வழிந்தோடும் முறையில் காணப்பட்டமையால் நீரில் விவசாய இரசாயனம் மற்றும் பசளைகளில் உள்ள கழிவு உலோக வகைகள் ஒன்றுசேர்க்கப்படாததா என்பது சர்ச்சைக்குரிய தன்மையில் காணப்பட்டது.

## 3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

**அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நடைமுறைகளுக்குப் புறம்பானவைகள்**

2014 இன் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கும் மாவட்ட செயலகத்திற்கும் வழங்குவதற்காக $10^1X15^1$ அளவில் 231 துணிக் கூடாரங்களைக் (கெனபி ஹட்) கொள்வனவு செய்வதற்காக அலகொன்று ரூபா 34,000 வீதம் ரூபா 7,854,000 இற்கு கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் இந்தக் கொள்வனவு செயற்பாடுகளின் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பின்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்கவில்லை.

| அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | விபரம் |
| --- | --- |
| 4.3.1(அ), (ஆ), (இ) வழிகாட்டி | திட்டமொன்றோ அல்லது மதிப்பீடொன்றோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4.3.1 வழிகாட்டி | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3.2.2(அ) வழிகாட்டி | பத்திரிகை அறிவித்தல் தேசிய பெறுகைகள் முகவராண்மையின் இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டு போட்டி அடிப்படையிலான கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை. |
| 5.3.10, 11, 12 மற்றும் 13 ஆம் வழிகாட்டி | கேள்விகளின் செல்லுபடிக் காலம் தொடர்பான தகவல்கள் மற்றும் கேள்விக் காப்பீடு அல்லது கேள்வி காப்பீட்டுக் கூற்றை சமர்ப்பிக்க வேண்டியமைக்கான நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| 6.3.1 (ஆ) மற்றும் (இ) வழிகாட்டி | கேள்வி சமர்ப்பிக்கும் போது அதன் கூறுவிலைகள் இரண்டு பிரதிகளில் முத்திரையிடப்பட்ட உறைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை நிபந்தனைகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 6.3.4 வழிகாட்டி | கூறுவிலைகள் திறக்கப்பட்ட விபரம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3.12.1 (இ), (ஈ) மற்றும் 3.12.2 (II) வழிகாட்டி | இணையத்தளத்தின் ஊடாக உற்பத்தியாளர்களைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அதற்காக அவர்களின் முன்னைய தகைமைகள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 7.11.1 வழிகாட்டி | தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்தமையால் அந்தக் குழு கேள்வி மதிப்பீட்டு அறிக்கையொன்றைத் தயாரித்திருக்கவில்லை. |

## 3.13 நட்டமும் இழப்பும்

சிலாபம் பிரதேச செயலகப் பிரிவில் சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தில் நீர்க் குழாய்களை இழைப்பதற்காக ரூபா 9,850,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 4905 ஆம் இலக்க ஆரம்ப வரைப்படத்தின் கூறு இலக்கம் 01 இல் 0.0997 ஹெக்டெயர் அளவான பாரிய காணிப்பகுதியின் உரித்து 2013 யூன் 21 ஆந் திகதி முதல் கையேற்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் இழப்பீடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. காணி ஆணையாளர் நாயகத்தின் எல்/03ஜே/93/1 ஆம் இலக்க சுற்றறிக்கையினதும் 1993 ஒக்தோபர் 13 ஆந் திகதிய ID/05/D 08 ஆம் இலக்க சுற்றறிக்கையினதும் பிரகாரம் முறையே தண்டப்பணம் மற்றும் நிறுத்தி வைத்தல் வரியாக ரூபா 1,706,512 கூட்டுமொத்தமாக செலுத்த வேண்டியிருந்தது.

**3.14 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) புத்தளம் பிரதேச செயலகத்தின் மூலம் 618 ஆம் இலக்க புத்தளம் தெற்கு சனசமூக மண்டபக் கட்டிடத்தின் கூரை மட்டம் வரை சுவர் கட்டப்பட்டிருந்ததுடன் நிர்மாணத்தின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாமையினால் அந்த வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. புத்தளம் போன்ற வெப்பமான சுற்றாடலில் இவ்வாறு பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட நிர்மாணம் நீண்டகாலம் கைவிடப்பட்டிருந்தமை அரசாங்கத்தின் நிதியினை பயனற்ற வகையில் ஈடுபடுத்தியிருத்தலாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கருவலகஸ்வெவ பிரதேச செயலகத்தினால் 2015 ஆம் ஆண்டின் 100 நாள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இஹல புளியங்குளம் நீர் உத்தேசத்திட்டத்திற்காக நீலபெம்மே இலிருந்து நீரை வழங்குவதற்கு நீர்ப் பம்பியொன்றைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பம்பி கூடாரமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 350,695 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 257,467 தொகை செலவிடப்பட்டிருந்தது. நீரைப் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட பயிர்ச் செய்கை கிணற்றின் நீர் பாவனைக்கு பொருத்தமானது என்பதற்கான எவ்வித எழுத்து மூல சான்றுகளும் காணப்படாதிருந்ததுடன் நீர் வடிகாலமைப்புச் சபையின் வலய பரிசோதனைக்கூடம் - புத்தளம் இற்கு விநியோகிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் நீரில் ‘‘ஈ’’ கொலய் மற்றும் ‘‘கோலிபோம்’’ பற்றீரியா காணப்பட்டமையும், அமோனியா அளவு மற்றும் புளோரைட் அதிகமாக உள்ளடங்கியிருந்தமையினால் சுகாதாரத்திற்கு பாதகமாக இருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திலிருந்து எதிர்ப்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது.

**3.15 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நவகத்தேகம பிரதேச செயலகத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக புத்தளம் மாவட்ட செயலாளரின் 2011 சனவரி 23 ஆந் திகதிய ஆ/4/6/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமைக்காக உத்தியோகத்தர் பதவியில் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ் அரச முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்ளாது 2011 பெப்ரவரி முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரை ரூபா 315,356 தொகை பதில் கடமைப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமைக்காக பதிற் கடமைப் படி செலுத்துதல் தொடர்பாக கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பின்னரும் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிலபெம்மே நீர் உத்தேசத் திட்டத்தில் குடிநீர் தாங்கியை இரண்டு கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. முதலாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு பட்டியல் தீர்க்கப்பட்டிருந்ததுடன் இரண்டாம் கட்டத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 20 சதவீத முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அதன் வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், பிழையான அளவிடைகள் பயன்படுத்தப்பட்டு (அளவிடை

அறிக்கை தயாரிக்கப்படாமல்) ரூபா 229,973 செலுத்துவதற்கு அறிக்கை தயாரிக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்ட முற்பணத் தொகையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் உத்தியோகத்தர்களினால் பொறுப்பொன்று இன்றி அரசாங்கத்தின் பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு உரிய தரப்பினர் சந்தர்ப்பம் ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2014 ஆம் ஆண்டில் மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறை வேலை விடயத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட மதுறகம சனசமூக மண்டப நிர்மணத்தின் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 1,265,220 ஆக இருந்தது. நிறைவேற்றப்பட்ட 08 வேலை விடயங்களுக்காக ரூபா 596,862 ஒப்பந்தக்காரச் சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிர்மாணங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை மீறியமை தொடர்பாக ஒப்பந்தகாரச் சங்கத்திற்கு எதிராக எவ்வித சட்டரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முந்தலம் பிரதேச செயலகத்தில் கட்டகடுவ குளத்திற்கு அருகிலுள்ள வீதிக்கு கொங்கிரீட் இடுதல் மற்றும் பிள்ளையார் கோவில் வீதிக்கு கொங்கிரீட் கல் பரவுவதற்காக ரூபா 1,250,000 படியான ஒப்பந்தம் பிரதேசத்தின் தொண்டர் சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. சங்கத்தின் நிதி இயலுமை தொடர்பான உறுதிப்படுத்தலொன்றும் நிர்மாணத்தை மேற்கொள்ளும் தொழில்நுட்பவியலாளரின் இயலுமை மற்றும் ஏனைய வளங்களை வழங்குதல் தொடர்பான உறுதிப்படுத்தலின்றி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருருந்தது.

(உ) பள்ளம பிரதேச செயலகத்தினால் வீட்டிற்கு வீடு கிராமத்திற்குக் கிராமம் 15,000 கிராமங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட புளியங்குளம் மண்டலான வித்தியாலயத்தின் விளையாட்டுத்திடல் அபிவிருத்தி, வத்துபொல அறநெறிப் பாடசாலை கட்டிட நிர்மாணம் மற்றும் நூர் பள்ளிவாசலில் சமயப் பாடசாலைக்காக மலசலகூடமொன்றை நிர்மாணித்தல் போன்ற 03 செயற்திட்டங்களின் அளவிடை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.16 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 43 | 13 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 34 | 15 | 19 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1136 | 960 | 176 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 175 | 165 | 10 | - |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | -- | 01 | - | |
| | **மொத்தம்** | **1,401** | **1,184** | **218** | **01** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த ஊழியரொருவர் தொடர்பாக முறையான அங்கீகாரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

புத்தளம் மாவட்ட செயலகத்திற்கு நியமிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தரொருவருக்கு குறிப்பிட்ட காலப்பகுதி குறிப்பிடப்படாமல் புத்தளம் பொது வைத்தியசாலைக்கு மீளாய்வாண்டின் போது விடுவிக்கப்பட்டிருந்தார்.